

'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளினை நிரந்தரமாக நீக்கிய, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூகத்தில் சரி பாதி இருக்கின்ற பெண்களுக்கு அர்ச்சகர் பயிற்சி அளிக்க உத்தரவிட்டார்கள். அதன்படி, ரஞ்சிதா, கிருஷ்ணவேணி, ரம்யா ஆகிய மூன்று சகோதரிகள் அர்ச்சகர் பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர். அச்சகோதரிகளை நேற்று நேரில் சந்தித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி அவர்களுடைய பணிக்கு பயன்படும் வகையில் ஸ்மார்ட்போன் மற்றும் தலா ரூ.25 ஆயிரம் நிதியினை வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

### இலங்கை தமிழர்களின் நலனுக்காக

# பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது தி.மு.க. அரசு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப்.19-

"இலங்கை தமிழர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது தி.மு.க. அரசு" என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 18.9.2023 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டை பொறுத்தவரை எப்போதுமே இலங்கை தமிழர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை தி.மு.க. முன்னெடுத்துள்ளது. இலங்கையில் சிரமத்தில் வாடி தமிழகத்திற்கு வந்த அவர்களுக்கு முகாம் ஏற்படுத்தி, வாழ வகை செய்ததில் பெருமை தி.மு.க.விற்கே உண்டு. 'இலங்கை தமிழர்கள் அகதிகளும் அல்ல, அவர்கள் அனாதைகளும் அல்ல, அவர்களுக்கு நாங்கள் இருக்கிறோம்' என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தவுடன் ஓங்கி குரல் கொடுத்தார். அவர் ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் பலதரப்பு மக்களுக்கும் ஜீவாதார திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் முகாமில் வாழும் ஈழத்தமிழர்களுக்காக ரூ.317 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ளார்.



தினகரன்

இலங்கை தமிழர் நலன்

இலங்கை அகதிகள் முகாம் என்று இருந்ததை, இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் என பெயர் மாற்றிய பெருமையும் அவருக்கு உண்டு. மாவட்டங்கள் தோறும் காணப்படும் இலங்கை தமிழர்களுக்கான முகாம்களில் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகளை ரூ.231 கோடியே 54 லட்சம் செலவில் புதியதாக கட்டி தரப்படும் என முதல்வர் ஏற்கனவே அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

அதன் ஒரு பகுதியாக வேலூர், சேலம், தர்மபுரி உள்பட 13 மாவட்டங்களில் ரூ.79.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 1591 இலங்கை தமிழர் குடியிருப்புகளை அவர் நேற்றும் திறந்து வைத்துள்ளார். அங்கு ஒரு வீட்டை திறந்து வைத்ததோடு, குடியிருக்கும் மக்களுடைய அடிப்படை வசதிகள் குறித்து கலந்துரையாடி மகிழ்ந்தார். இத்திட்டத்தின் கீழ் 19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்கள் பயன்பெறுகின்றன.

இலங்கை தமிழர்களுக்கான முகாம்கள் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அடிப்படை வசதிகள் அற்று மோசமாக காணப்பட்டன. குடியிருப்புகள் மழை வந்தால் ஒழுகும் நிலையிலும், குடிநீர், கழிவறை உள்ளிட்ட போதிய அடிப்படை வசதிகள் இன்றியும் இருந்தன. மக்கள் நலம் நாடும் திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்தவுடன் அவற்றை சரி செய்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் விளைவாக தற்போது இலங்கை தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள், உரிய வசதிகளோடு கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை தமிழர்களின் குடும்பத்தினருக்கு இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புகள், தொழிற் கல்வி படித்து வரும் இலங்கை தமிழ் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை, ரேஷனில் இலவச அரிசி என பல்வேறு நலத்திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது.

மேலும் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள், முகாம்களுக்கு சாலை மற்றும் கழிப்பிட வசதிகளுக்காகவும் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது சிறந்த நிதி ஏராளம். முகாமில் உள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில் ரீதியிலான வாய்ப்புகளை இந்த அரசு நல்கி வருகிறது.

முகாம்களில் உள்ள தமிழர்களுக்கு கோ ஆப்டெக்ஸ் மூலம் தரமான ஆடைகள் வழங்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருமுறை சொன்னது போல், "தமிழக தமிழர்களையும், இலங்கை தமிழர்களையும் பிரிப்பது கடல் மட்டுமே. தமிழர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் ஒரு தாய் மக்களே" என்ற நல்லெண்ணமே இலங்கை தமிழர்களை நம்மில் ஒருவராக மாற்றிக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் நலஉதவிகள் வழங்குகின்றனர்!

# பெருங்களத்தூர் தெற்கு பகுதி 61வது வார்டில் பொதுக்கூட்டம்!

## தலைமை: ஆர்.மஞ்சுநாதன்! வரவேற்புரை : எஸ்.சேகர்! கந்திலி கரிகாலன் சிறப்புரை!

காஞ்சிபுரம், செப். 19-

காஞ்சி வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. பிரக்கன் காரணை 61வது வார்டு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் இன்று (19.9.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் தேவநேச நகர் 4 வது தெருவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு 61வது வார்டு செயலாளர் ஆர். மஞ்சுநாதன் தலைமை வகிக்கிறார்.

பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ். சேகர் வரவேற்புரையாற்றுகிறார்.

பி.புகழேந்தி, எஸ். ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., எஸ்.கமலா சேகர் எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., க.ரவி, வ.க.ரவி, கே. சாமுண்டீஸ்வரி, ஜெ.மணி வண்ணன், எஸ்.ஐசக், க. குருநாதன், கே.வெங்கடேசன், பி.சுரேஷ், அ.முகமது ஷெரீப், ஆர்.சிவக்குமார், ஆர்.தீபன் சக்கரவர்த்தி, எஸ்.தனசேகரன், ஏ.திருநாவுக்கரசு, சி.மனோகரன், ஓ.சுந்தி, பி.கோபி, கே. அப்பாசாமி, டி.நந்தகுமார், ஏ.நந்தகுமார், எஸ்.நந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழக குழு தலைவருமான டி.ஆர்.பாலு, காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் இவ்விழாவில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மு.ஆதி மாறன், டி.காமராஜ் எம்.சி., டி.ஜெயக்குமார், ஆர்.எஸ்.லயன் சங்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

நிறைவாக ஆர்.கதிரவன் நன்றி கூறுகிறார்.

### ஆர்.கே.ஆசைத்தம்பி, சாமுண்டீஸ்வரி ஏற்பாட்டில் ! இரா.லட்சுமணன், என்.எம்.கதிரேசன் முன்னிலை!

# 39வது வட்டத்தில் தந்தை பெரியார் பிறந்தநாள்! இலவச கண் சிகிச்சை முகாம்!

## தா.இளைய அருணா - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை செப்:19

தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்த நாளை முன்னிட்டு 17.9.2023 ஞாயிற்றுக்கிழமை ஆர்.கே. நகர் கிழக்கு பகுதி 39வது வட்டம் அசோக் நகரில் செயல்வீரர் ஆர்.கே. ஆசைத்தம்பி, சாமுண்டீஸ்வரி ஆகியோர் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் இரா. லட்சுமணன்,வட்ட கழக செயலாளர் என்.எம்.கதிரேசன், ஆகியோர் முன்னிலையில், மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா, தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பொது மக்களுக்கு இனிப்புகளையும், பெரியார் பற்றிய புத்தகங்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இலவச கண்சிகிச்சை முகாமை தொடங்கி வைத்து, இலவச கண்ணாடிகளை பொதுமக்களுக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் க.தேவி கதிரேசன் எம்.சி,என்.மருது கணேஷ்,ஆர்.டி.ராஜா, எஸ் எம்டி.இரவிச்சந்திரன்,டி. கணேசன், பி.அன்பழகன், எல்.செல்வமணி, ஜெ. கவுஷ்பாஷா, டிஎல்பி.ரவி, எஸ்.இருசம்மா, எஸ்.துரை, ஜெ. ஜெகன், எ.இப்ராஹிம், அப்துல்லா, செபஷ்டின்பாபு, கே.எஸ்.குருநாதன், ஜி.மணிகண்டன், சலாவுதீன், இராஜேந்திரன், ரஷீத், ஒளிவண்ணன்,தமிழ் மாறன்,பரத்குமார், சண்முகசுந்தம், மகாலிங்கம் மற்றும் வட்ட கழக,பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வகிகள் கலந்து கொண்டனர்.

### துறைமுகம் மேற்குப் பகுதி துணைச் செயலாளர் - பெருநகர சென்னை மாநகராட்சி

# 59-வது வார்டு கவுன்சிலர் திருமதி சரஸ்வதி கருணாநிதி மறைவு!


## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, செப்.19-

துறைமுகம் மேற்குப் பகுதிக் கழக துணைச் செயலாளரும் - பெருநகர சென்னை மாநகராட்சி 59-வது வார்டு கழக உறுப்பினருமான திருமதி. கே.சரஸ்வதி, திடீர் மாரடைப்பு ஏற்பட்டு, நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவருக்கு கருணாநிதி எனும் கணவரும், சூர்ய பிரகாஷ் எனும் மகனும், துர்கா தேவி எனும் மகளும் நான்கு பேரக் குழந்தைகளும் உள்ளார்கள். சூர்ய பிரகாஷ், துறைமுகம் மேற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளராக உள்ளார்.

இம்மறைவுச் செய்தி அறிந்து சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி. கே.சேகர்பாபு மற்றும் பெரு



நகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. பிரியா ராஜன் ஆகியோர் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

மேலும் துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ். முரளி, 5வது மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, பகுதிக் கழக துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, வட்டச் செயலாளர் சேப்பாக்கம் பிரபாகரன், சதீஷ்குமார், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எம்.விநாயகம் உள்பட பலரும் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று பிற்பகல் எண்.110/58, பங்காரு நாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 எனும் முகவரியில் உள்ள இல்லத்திலிருந்து புறப்பட்டு கீழ்ப்பாக்கத்தில் உள்ள கிறிஸ்துவ இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

### டி.சுந்தரம் தலைமையில் மாதவரம் 30-வது வட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா - தந்தை பெரியார் பிறந்த நாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, செப். 19 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்குப் பகுதி 30-வது வட்டக் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115-வது பிறந்த தினத்தை முன்னிட்டு, கழகக் கொடியேற்றி அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி இனிப்பை வட்டச் செயலாளர் டி.சுந்தரம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் டி.சுந்தரம் தலைமை வகித்தார்.

இதில் பி.எஸ்.என்.எல். தயாளன், குமார், கே.நரேந்திரன், எல்.சீனிவாசன், ஏ.வி. முருகன், சக்கரபாணி, பரமேஸ்வரி, எஸ்.என். ராஜி, வி.பாஸ்கரன், பி.தேவதாஸ், திருமலை, உமா மகேஸ்வரி, பி.சுரேஷ், நைட்டிங் கேள், ஆவடி நாகராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அதேபோன்று தந்தை பெரியார் அவர்களின் 145-வது பிறந்த தினத்தை முன்னிட்டு வட்டச் செயலாளர் டி.சுந்தரம் தலைமை யில் 30-வது வட்டத்தில் கல்பாளையம் லட்சுமிபுரம் பேருந்து நிலையம் அருகில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் டி.கௌதமன், பி.எஸ்.என்.எல். தயாளன், ரவிமுருகன், என். ராஜீ, டி.வி.எஸ்.கோபி, அலிப் ரகுமான், பி.தேவராஜ், எஸ்.ன். கோதண்டன், வெங்கட்ராமன், வி. பாஸ்கர், எஸ்.என்.ஆர். முருகன், மாதவி, டி.எஸ்.உதயநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளை முன்னிட்டு ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயல் 9வது வார்டு பத்மாவதி நகர் பகுதி சபா கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் அப்பகுதி மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது அடிப்படை வசதிகளான சாலை சிரமைத்தல், மின்விளக்கு, குடிநீர், மழைநீர் வடிகால்வாய், கழிவுநீர் கால்வாய் அமைத்தல், உள்ளிட்ட பணிகளை செய்து தரவேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்திய நிலையில் விரைவில் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதியளித்தார். கூட்டத்தில் மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் தர்ப்பகராஜ், மண்டல குழு தலைவர் அமுதா பேபிசேகர், மாநகர செயலாளர் சன் பிரகாஷ், பகுதி கழக செயலாளர் பேபி சேகர், பொன்விஜயன், மாநகராட்சி அதிகாரிகள் பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### இராயபுரம் மண்டலம், வால்டாக்டஸ் சாலையில்

# டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கைகள்!

## சிறப்பு மருத்துவ முகாமினை தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, செப். 19-

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வால்டாக்டஸ் சாலையில் உள்ள ஜட்காபுரத்தில் நடைபெற்ற டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று (17.09.2023) பார்வையிட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள காய்ச்சல் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, முகாமில் அமைக்கப்பட்டுள்ள டெங்கு கொசு உற்பத்தியாகும் முறை, தடுக்கும் வழிமுறை குறித்து அமைக்கப்பட்டுள்ள மாதிரி கண்காட்சியினைப் பார்வையிட்டு, அங்குள்ள பொது மக்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் செய்தியாளர்களின் சந்திப்பில் தெரிவித்ததாவது:

பருவமழைக் காலங்களில் கொசுக்களினால் பரவும் நோய்களை ஆரம்பநிலையிலேயே கட்டுப்படுத்தும் வகையில் இன்று இந்தக் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் காய்ச்சல் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நிரந்தரமாக 300 மருத்துவ நிலையங்கள் மூலம் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வந்தாலும், மழைக்காலங்களில் பரவும் டெங்கு, எலிக் காய்ச்சல், மலேரியா, தோல்நோய், வயிற்றுப் போக்கு உள்ளிட்ட இதர நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் நிரந்தர நிலையங்கள் நீங்கலாக குறைந்தது ஒரு நாளைக்கு 50 தெருக்களில் உள்ள மக்களுக்கு இந்த மருத்துவ முகாம்கள் மூலம் சிகிச்சைகள் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தற்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் நேற்று மாநிலம் தழுவிய கூட்டங்களை நடத்தி அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்த ஆண்டு தொடக்கம் முதல் இதுவரை 297 நபர்களுக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் மிகவும் குறைவு. மேலும் கடைசி மூன்று மாதங்களில் இன்னும் கவனமுடன் செயல்பட வேண்டும் என்பதால், தற்பொழுது இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரவாயல், பிள்ளையார் கோயில் தெருவில் நடைபெற்ற நிகழ்வை போல் ஏற்படக் கூடாது என்பதற்காக ஒரு பக்கம் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும், மறுபக்கம் ஆரம்ப நிலையில் கொசுப் புழுக்கள் அழிப்பு மற்றும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் என பன்முக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செப்டம்பர் மாதத்தில் 27 நபர்களுக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகள், ஜட்காபுரம் போன்ற பகுதிகளில் டிரம்களில் தண்ணீர் சேகரித்து வைக்கும் நிலை உள்ளது. இவ்வாறு சேகரித்து வைக்கப்படும் நல்ல நீரில் டெங்கு கொசு உற்பத்தியாகி பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் தண்ணீர் தொட்டிகளை முழுமையாக மூட வேண்டும். மேலும், காலி மனைகளில் காணப்படும் குப்பைகள் மற்றும் கட்டுமானங்கள் நடைபெறும் இடங்களில் மழைநீர் தேங்கி கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்பு இருப்பதால், இவற்றை ஒழிக்க மாநகராட்சியின் சார்பில் கைத்தெளிப்பான்கள் மற்றும் கொசுப்புகைப் பரப்பும் இயந்திரம் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தக் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளில் கைகளினால் இயக்கப்படும் 424 கம்ரஷன் ஸ்பேரேயர்கள், 120 பவர் ஸ்பேரயர்கள், பேட்டரியால் இயக்கப்படும் 300 இயந்திரங்கள், 324கைபுகைத்தெளிப்பான்கள், 1 மினி புகைத்தெளிப்பான், வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள 68 புகைபரப்பும் இயந்திரங்கள், பைரித்திரம், டெக்னிக்கல் மாலத்தியான், அபேட், கொசு லார்வா எண்ணெய் ஆகியவை கையிருப்பில் உள்ளன.

மழைக்கால நோய்களைக் கட்டுப்படுத்த மாநகராட்சியின் சார்பில் காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடத்தப்பட்டுள்ள 3,390 மருத்துவ முகாம்கள் மூலம் 1,13,489 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். பொது மக்களுக்கு தேவையான அனைத்து மருந்துகளும் தயார்நிலையில் உள்ளது. மேலும், 1,489 கிலோ நிலவேம்பு குடிநீரும், 200 கிலோ கபசுரக் குடிநீரும் தயார்நிலையில் உள்ளது. சித்த மருத்துவர்களின் மேற்பார்வையில் விரும்புவோருக்கு இவற்றை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 7 முதல் 8 செ.மீ. மழைப் பொழிவு ஏற்பட்டுள்ளது. மாநகராட்சியின் அனைத்து சுரங்கப்பாதைகளிலும் தண்ணீர் தேங்காமல் சீரான வகையில் உள்ளது. மழைக்கால நோய்கள் வராமல் தடுக்க மாநகராட்சியின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் தன்னிச்சையாக மருந்துகளை உட்கொள்ளாமல், அரசு நிலையங்கள் மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் நேரடியாகச் சென்று சிகிச்சைகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கொசு வளரும் இடங்கள், அவற்றை அழிக்கும் முறைகள், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாநகராட்சியின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் மழைநீர் வடிகால் பணிகளை முடித்திடவும், மழைநீர் கால்வாய் இணைப்பு பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாலைகளில் நடமாடும் மாடுகளை பிடித்து அதன் உரிமையாளர்கள் மீது உரிய நடவடிகக்கை எடுக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், கூடுதல் மாநகர நல அலுவலர் திருமதி மகாலஷ்மி மற்றும் மண்டல அலுவலர், பூச்சியியல் நிபுணர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டு சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சித்திக் அலி ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ – தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன் ஆகியோர் திருத்தணியில் நடைபெற்ற திண்ணை பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை குறித்து இந்தியா கூட்டணிக்கான பிரச்சாரம் மேற்கொண்டார்கள். உடன் டி.எஸ்.ஷியாம் சுந்தர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், தலைமை கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி, மாவட்ட பிரதிநிதி அசோக் குமார், முன்னாள் கவுன்சிலர் டி.ரகுநாதன் அணிகளின் நிர்வாகிகள் ஜி.அப்துல்லா, பிரகாஷ், அஸ்லம், கோபி, மத்தூர் பண்ணீர் எம்.சீனிவாசன், பி.எல்.ஆனந்தன் மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளனர்.